**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச்சட்டத்தின் (cap. 264) 62 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதியத்தால் கணக்குகள் அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக | 2011 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியத்தைப் பயன்படுத்தி உள்ளூராட்சி சேவை ஓய்வூதியத்தின் பயனாளிகளுக்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு | வருமானம் மற்றும் செலவினங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு |

| | | |
|---|---|---|
| பெறவேண்டிய ரூபா 72,558,585 பங்களிப்பானது வருமானம் மற்றும் செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ள போதிலும் முன்னைய ஆண்டுகள் மற்றும் இந்த ஆண்டு தொடர்பாக இந்த ஆண்டில் பெறப்பட்ட ரூபா 75,230,921 பங்களிப்பு அந்தக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஏற்பட்ட வேறுபாடானது ஆண்டின் பற்றாக்குறையாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 2,672,336 தொகையாகும். | மேற்கொள்ளப்பட்டிருக்காததால் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அட்டுறு அடிப்படையில் சீர்செய்யப்படமாட்டாது. | செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்திற்கு பங்களிப்புக்களை செலுத்தும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 302 ஆகவும், அந்த நிறுவனங்களில் இருந்து பெறவேண்டிய நிலுவை பங்களிப்பு ரூபா 1,143,420,252 ஆகவும் காணப்பட்டன. எவ்வாறாயினும், 256 உள்ளூராட்சி நிறுவனங்களால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 97 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கு பெறப்பட வேண்டிய பங்களிப்புகள் ரூபா 760,406,356 ஆக காணப்பட்ட போதிலும் அந்தத் தொகை உள்ளூராட்சி நிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்களாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 103 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கு பெறப்பட வேண்டிய பங்களிப்புகள் ரூபா 278,494,348 தொகையாக காணப்பட்ட போதிலும் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புகளின் தொகை ரூபா 184,054,767 ஆக காணப்பட்டதால் ரூபா 94,439,581 தொகை | ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களாலும் மாதாந்தம் அனுப்பப்படுகின்ற காசோலைகளின் தொகை கழிக்கப்பட்டு, பெறவேண்டிய தொகையை அறிவிக்கும் வகையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மாதாந்த விலைப்பட்டியல் அனுப்பப்படுகின்றது. மேலும், அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்களுக்காக மாதாந்தம் வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் அந்த நிறுவனங்களுக்கு விலைப்பட்டியலுடன் சேர்த்து அனுப்பப்படும். அதன் பிரகாரம் 2020.12.31 இல் உள்ளவாறான விலைப்பட்டியல் புத்தகங்களின் மீதிக்கும் 2020.12.31 இல் உள்ளவாறான இறுதிக் கணக்குகளில் உள்ள நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய பங்களிப்பு மீதிக்கும் இடையில் வேறுபாடெதுவும் காணப்படவில்லை. தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட வேறுபாடுகள் தொடர்பாக அந்த நிறுவனங்களிடம் விசாரணை செய்வதற்கும் | பெறவேண்டிய பங்களிப்புக்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. அதே சமயம் 22 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கு பெறப்பட வேண்டிய பங்களிப்பு ரூபா 14,868,309 ஆக உள்ள போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் ரூபா 19,567,394 ஆக காணப்பட்டதால் ரூபா 4,699,085 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | ஏதேனும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதனை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15(2)(ஆ) பந்தி | கடந்த இரண்டு வருடங்களில் செயற்படுத்தப்பட்டிருக்காத ஏதாவது நிதியங்கள் காணப்பட்டால் அல்லது அரசாங்க பாதீட்டின் கீழ் அந்த நிதியத்தின் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்ள முடியுமானால், அந்த நிதியங்கள் முடிவுறுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியமானது செயற்படவில்லை எனவும் ஓய்வூதியத் திணைக்களத்தின் வாக்குபணத் தலைப்பின் கீழான பாதீட்டு ஒதுக்கீடுகளுடன் இந்த நிதியத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், கணக்கு இல. 4 இற்கான குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தற்போதுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் நிதியத்தை மூடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியால் நியமனம் செய்யப்பட்ட விசேட குழுவின் 2017 மார்ச் 31 இல் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியம் உள்ளிட்ட நிதியங்கள் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மூடப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த அறிக்கை தொடர்பான எந்தவொரு கொள்கை தீர்மானத்தையும் அமுல்ப்படுத்துவதற்கான அங்கீகாரம் தொடர்பில் இதுவரை தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2012 பெப்ரவரி 08 ஆம் திகதிய 01/2012 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | ஒவ்வொரு மாதமும் நிதியத்தில் உள்ள உறுப்பினர்களின் இறப்புக்கள் தொடர்பான அறிக்கைகள் மாவட்டச் செயலாளர்களிடம் இருந்து தொடர்ந்துவரும் மாதத்தின் 25 ஆம் திகதிக்கு முன்னர் கோரப்பட்டு அந்த அறிக்கைகளின் பிரகாரம் உரிய நேரத்தில் இறப்புக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எனினும் 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 647 உறுப்பினர்களின் இறப்புக்கள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 2,306,611 வருடாந்தம் சீராக்கம் மேற்கொள்ளப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2019/02/28 ஆம் திகதிய 3/2/7 ஆம் எனது இலக்க கடிதங்கள் மூலம் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களின் செயலாளர்களுக்கும் உறுப்பினர்களின் மரணம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, கணனி தரவுத்தளத்தின் மூலம் இறந்த ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து இறந்த ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக மாதாந்தம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இறப்புகளை சீர்செய்ய முடிந்திருந்தது.<br><br>இறந்த ஓய்வூதியம் பெறுவோரின் விபரங்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும், இந்தத் தகவல் காணப்படாத போது தொடர்புடைய உள்ளூராட்சி சபைகளிற்கு பெயர் அறியப்படாத ஆவணங்களுடன் சேர்த்து தரவுத்தளத்தில் கிடைக்கக்கூடிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நிதி விளைவு ரூபா 2,672,336 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 132,436,333 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 129,763,997 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நடைமுறை ஆண்டிற்கான பங்களிப்புக்கள் காசு வருமானமாக காட்டப்பட்டிருந்ததுடன் நடப்பாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் பொதுக்

கணக்கிற்கான மாற்றங்கள் நடப்பாண்டின் வருமான செலவினக் கணக்கில் செலவினமாக காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் போது பங்களிப்பு வருமானம் ரூபா 3,890,304 ஆலும் செலவினங்கள் ரூபா 133,654,300 ஆலும் குறைவடைந்தமை இம் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

## 2.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றின் பிரகாரம் 302 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய பங்களிப்புகள் ரூபா 1,143,420,252 ஆகும். இம் மீதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் ரூபா 459,007,662 பங்களிப்புக்கள் தொடர்பாக எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போது 88 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய பங்களிப்புகளை அறவீடு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க உள்ளூராட்சி சேவைகள் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்குமாறு நிதி ஆணைக்குழுவின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 2019 திசெம்பரில் ஓய்வூதியத் திணைக்களத்தில் மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பணம் செலுத்தப்படாதது தொடர்பாக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதேபோல் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகின்ற மாதாந்த விலைப்பட்டியல்கள் மூலம் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பாக நிறுவனங்களிற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நிறுவனங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அறிவித்து பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாதாந்த பங்களிப்புக்கள் அறவீடு செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, ஓய்வூதியப் பங்களிப்பு நிலுவைகளை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |